

கடலூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொகுதி பார்வையாளர் அங்கையர் கன்னி சிறப்புரையாற்றி, வாக்காளர் பூர்த்தி விண்ணப்பத்தினை வழங்கினர். கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரி ராஜா, மாநகர் கழகச் செயலாளர் கே.எஸ்.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு மெய்நிகர் ஒளிப்பதிவுக் கூடம்(Virtual Studio) உள்ளிட்ட 5 தொழில்நுட்பப் படப்பதிவுக் கூடங்களையும், ஒலிப்பதிவுக் கூடத்தையும் திறந்து வைத்து, விரிவுபடுத்தப்பட்ட 14417 தொலை பேசி சேவையினையும் தொடங்கிவைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் குமரகுருபரன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, ஒருங்கிணைத்த பள்ளிக் கல்வித்திட்ட இயக்குநர் திருமதி.ஆர்த்தி, தொடக்கக்கல்வி இயக்குநர் கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க. அரசு கொடுக்க மறுத்த இட ஒதுக்கீட்டை - சட்டப் போராட்டம் மூலம்

# முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் பெற்றுத் தந்தார்!

## மக்களவையில் டாக்டர் செந்தில்குமார் பேச்சு!

புதுடெல்லி, பிப். 6-

ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கம் கொடுக்க மறுத்த பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை சட்டப் போராட்டம் செய்து பெற்று தந்தது தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. மட்டுமே என்று மக்களவையில் டாக்டர் செந்தில்குமார் பேசினார்.



குடியரசுத் தலைவர் உரைக்கு தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார் நன்றி தெரிவித்து பேசினார்.

**கொடூரத்தை மறைத்து பெருமை பட வேண்டாம்!**

அவற்றில் நரேந்திர மோடி அரசாங்கம் வறுமையை அதிகளவில் ஒழித்துவிட்டதாக கூறுகின்றது ஆனால், பியூ ஆராய்ச்சியின் மதிப்பீடுகளின்படி, 75 மில்லியனுக்கும் அதிகமான இந்தியர்கள் மீண்டும் வறுமையில் மூழ்கியுள்ளனர் என்று சொல்கிறது மேலும், இந்தியாவின் 100 மில்லியன் வலிமையான நடுத்தர வர்க்கத்தில் மூன்றில் ஒரு பகுதியினர், அரை தசாப்தகால கடின உழைப்பால் சம்பாதித்த பொருட்செல்வம் இப்பொழுது அழிந்து கொண்டு இருப்பதை பதிவு செய்தார். இப்படி இருக்க இந்த கொடூரமான உண்மையை மறைத்து ஒன்றிய ஆட்சி பெருமைப்பட ஒன்றுமில்லை.

NITI ஆயோக்கின் தரவுகளை அரசாங்கம் நம்பியிருப்பது முரண்பாடாக இருக்கிறது, ஆனால் நரேந்திர மோடி அரசாங்கம் இந்திய கூட்டாட்சியை எவ்வாறு சிதைக்கிறது என்பதை நான் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறேன். NITI Aayog இன் தலைமை நிர்வாக அதிகாரி, 14வது நிதிக் கமிஷன், மாநிலங்களுக்கான மத்திய வரிகளில் 42% பங்கைப் பரிந்துரைத்துள்ளது. ஆனால் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அதை 33% ஆகக் குறைக்க விரும்பியது என்று NITI Aayog இன் தலைமை நிர்வாக அதிகாரி கூறியுள்ளார். இந்த அணுகுமுறை இந்திய ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

**குடியரசு தலைவரின் உரை பா.ஜ.க.வின் தேர்தல் உரை!**

இந்த ஒன்றிய அரசாங்கத்தின் ஜனாதிபதி உரை என்று சொல்வதைவிட பி.ஜே.பி.யின் தேர்தல் உரையை என்று சொல்லலாம், 2014 முதல் இந்தியாவில் ஒரு மிகப்பெரிய மாற்றம் நடந்து இருப்பதாக கூறுகிறது. இருப்பினும், அப்பட்டமான யதார்த்தத்தை பேசுவோம். இந்திய எரிபொருள் விலை உயர்விற்கு புவிசார் அரசியல் காரணிகள் மிகக் குறைவாகவும் மேலாக மற்ற காரணங்களால் அதிகமாகவும் இருந்தது. இதனால் இறுதியில் அரசும், நிறுவனங்களும் பலனடைந்தனரே தவிர விலைவாசி உயர்வால் சாமானிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தேர்தல் நெருங்கும்போதுதான் நரேந்திர மோடி அவர்கள் விழித்துக் கொள்வார்.

2016 ஆம் ஆண்டு மோசமான பணமதிப்பு நீக்கம், புழக்கத்தில் இருந்த 86% ரொக்கத்தை அழித்தது மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அவசரமாக அமல்படுத்தப்பட்டது ஆகியவை நாடு முழுவதும் உள்ள வணிகங்களுக்கு கடுமையான பாதிப்புகளை கொடுத்தன.

மற்றொரு பொய் வேலைவாய்ப்பு பற்றி ஆனால் கடைசி இந்தியாவின் அதிகாரப்பூர்வ எண்ணிக்கைபடி நரேந்திர மோடி அரசாங்கத்தில் தான் இந்தியாவில் 45 ஆண்டுகள் இல்லாத வேலையின்மை நிலவுவதாக கூறுகிறது. இவை 2017-18ல் 6.1% ஆக உயர்ந்தது. கடந்த பத்து ஆண்டுகளில் பொருளாதார பின்னடைவுகள், கொள்கை தவறுகள் மற்றும் சாதாரண குடிமக்களுக்கு கஷ்டங்கள் இப்படி அதிகமாக உள்ளன. நமது தேசம் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களின் கடுமையான உண்மையை கவனமாக கையாள வேண்டிய நேரம் இது.

**நரேந்திர மோடியின் வேடிக்கை விளையாட்டு!**

மருத்துவப் படிப்புகளில் ஓ.பி.சி.க்களுக்கு 27% இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியதற்காக நரேந்திர அரசாங்கத்திற்குப் பெருமை சேர்ப்பதாக குடியரசுத் தலைவர் உரை கூறினாலும், உண்மை வேறு விதமாக உள்ளது. நமது தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலினின் இடைவிடாத முயற்சியால் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகுதான் இந்த மாற்றம் ஏற்பட்டது. இந்த விவகாரத்தில் அவரது தலைமையில் தி.மு.க. முதல் பொதுநல மனு தாக்கல் செய்தது.

2021 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதில் அரசாங்கத்தின் தாமதத்தால் அவர்கள் சுமார் 10,000 இடங்களை இழந்துள்ளனர். இப்படி இருக்க நரேந்திர மோடியின் அரசாங்கம் சமூக நீதிக்கான அரசாங்கம் என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக மு.க.ஸ்டாலின் போன்ற தலைவர்களின் உண்மையான முயற்சிகளை அங்கீகரிப்பது மிகவும் அவசியம்.

**ஊடகங்களை எதிர்கொள்ள பயப்படும் மோடி!**

மணிப்பூரில் இன மோதல் குறித்து பிரதமரின் மௌனம் மற்றொரு குறிப்பிடத்தக்க புறக்கணிப்பு ஆகும், இது முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஈடுபாடு இல்லாததை பிரதிபலிக்கிறது. இவர்கள் தான் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை மவுன சிங் என்றனர். அதாவது அவர் அமைதியாக இருப்பதாக கூறினர் ஆனால் நிஜத்தில் நரேந்திர மோடி அவர்களுக்குத்தான் இவை கட்சிதமாக பொருந்தும். ஏனென்றால் உண்மையையும், ஊடகத்தையும் எதிர்கொள்ளாமல் ஓடுவது மற்றும் அமைதியைக் கடைப்பிடிப்பது நரேந்திர மோடி அவர்கள் தான்.

இதுவரை மக்களவை வரலாற்றில் 17வது மக்களவை 230 நாட்கள் மட்டுமே கூடியுள்ளது. இவை விவாதங்கள் மற்றும் மசோதாக்களை ஆய்வு செய்வதற்கான நேரத்தை திட்டமிட்டே குறைக்கிறது. இதனால் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சாராம்சத்தையே கேள்விக்குள்ளாக்கு கிறது. இரு அவைகளிலும் இருந்து 146 எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்து மூன்று நாட்களில் 14 மசோதாக்களை நிறைவேற்றி "எதேச்சதிகாரத்தை" கடைப்பிடிக்கிறது பி.ஜே.பி. அரசாங்கம்.

நான்கு ஆண்டுகளாக மக்களவையில் துணை சபாநாயகர் இல்லாதது அரசியலமைப்பு விதிமுறைகளை மீறுகிறது, இது வழக்கமாக எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஒதுக்கப்பட வேண்டியது என்பது மரபு. இவை நரேந்திர மோடி அரசு எப்படி அரசியல் சட்டத்தை மீறுகிறது, எதிர்க்கட்சிகளின் குரல்வளையை நெரிக்கிறது என்பதை இது காட்டுகிறது.

மிருக பலமான பெரும்பான்மை இருந்தாலும்கூட, நரேந்திர மோடி அரசாங்கம் அவசரச் சட்டங்களின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளது. 2014 முதல் இந்த பாதை வழியாக 76 சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை கடந்த மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சியை விட அதிகமான எண்ணிக்கை ஆகும்.

தொற்றுநோய்க்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதியை முடக்கியது மிகப்பெரிய தவறாகும். இதனால் அவரவர் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

**வெற்று இருப்பை நோக்கிய மோடி!**

பாராளுமன்ற நடவடிக்கைகளில் பிரதமரின் ஈடுபாடு குறைவது அவர் தலைமை பண்பில் இருந்து விலகி வெறும் தனது இருப்பை நோக்கி நகர்வது தொடர்பான போக்கைக் குறிக்கிறது. பாராளுமன்ற நடவடிக்கைகளில் வகுப்புவாத அத்துமீறல் மதச்சார்பின்மையின் அடிப்படைக் கோட்பாட்டை அழிக்க நினைப்பது இந்தியாவின் பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கிய தன்மையை பாதிக்கின்றது.

முன்னாள் முதல்வர் நேருவின் புகழ்பெற்ற ட்ரைஸ்ட் வித் டெஸ்டினி (Tryst with destiny) பேச்சில் சில வாக்கியங்களைப் தற்போது இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்து இருக்கிறேன். நான் அதற்கு "ட்ரைஸ்ட் வித் டிரனி" (கொடுங்கோன்மையை சந்திப்பது) என்று பெயரிட்டு உள்ளேன். அவை பின்வருமாறு

"நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு, சுதந்திரம்பெற்று நம்மை நாமே ஆட்சி செய்ய ஜனநாயகத்தை தேர்ந்தெடுத்தோம், ஆனால் இப்போது கொடுங்கோன்மையின் பேயை நாம் துரத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஒரு இருண்ட நேரத்தின் விளிம்பில் நாம் இருக்கின்றோம், மீண்டும் 2024 இல் இந்தியா தற்போதைய ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், விடியும் பொழுது நாம் அடக்குமுறையின் மத்தியில் காணப்படுவோம் மேலும் நாம் விரும்பி வைத்திருந்த ஜனநாயக இலட்சியங்களின் மீது தாக்குதல்கள் ஏற்படுத்தக்கூடும்.

**மோடியின் அபிலாஷைகளால் மறைக்கப்படலாம்! 2024-ல் விழித்திருங்கள்!**

உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் போது, இந்தியா மட்டும் விழிப்புணர்வாக வாழ்வதற்கும் சுதந்திர காற்றை சுவாசிப்பதற்காக விழித்துக்கொண்டு இருக்காது. மாறாக விடுதலை பெற்ற நம் தேசத்தின் ஆன்மா ஆட்சியாளர்களால் கட்டுக்குள் கொண்டு வரப்படும். மேலும் நாட்டில் ஏற்படும் துன்பங்களால் நீள் இரவுகளில் நாடும் நாட்டு மக்களும் தூக்கமின்றி பயணிக்கும்.

சுதந்திரத்திற்காகப் போராடியவர்களின் லட்சியம் எதேச்சதிகாரப் போக்குகளைக் கொண்ட ஆட்சியின் அபிலாஷைகளால் மறைக்கப்படலாம். எல்லாரும் தயாராக இருங்கள் இந்த ஆட்சியாளர்களால் நாம் நம் இந்திய மக்களின் கண்ணீரை அதிகம் துடைக்க நேரிடும். அவை மக்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறை மற்றும் தனி மனித சுதந்திரத்தைக் குறைப்பதனால் அதிகமாக அமையும். ஒடுக்குமுறையின் கூக்குரல்கள் ஜனநாயகத்தின் குரலை மூழ்கடிக்கலாம். நமது உழைப்பும், இனி ஒரு சுதந்திர தேசத்தின் முன்னேற்றத்தை நோக்கி செலுத்தப்படாமல் இருக்கலாம், மாறாக அது சர்வாதிகார ஆட்சியின் சுவர்களை வலுப்படுத்த பயன்படுத்தப்படலாம். ஒரு காலத்தில் இந்தியாவுக்காக நாம் கொண்டிருந்த கனவுகள், ஜனநாயக விழுமியங்கள் சிதைவதைக் காணும் உலகத்தின் கடுமையான யதார்த்தங்களால் வாழ நேரிடலாம்".

எனவே இந்த பா.ஜ.க ஆட்சியை அகற்றுவது மிகவும் அவசியம் இவ்வாறு டாக்டர் செந்தில்குமார் பேசினார்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

## மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி தலைமையில் அமைதி ஊர்வலம்!

விழுப்புரம், பிப். 6 - கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் ஆலோசனைப்படி கழகத் துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி வழிகாட்டுதலின்படி விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முகப்பில் இருந்து மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ. தலைமையில் ஊர்வலமாகச் சென்று விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ. புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, நகரச் செயலாளர் இரா. சக்கரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ. பாஸ்கரன், அப்துல் சலாம், பொதுக்குழு உறுப்பினர் பஞ்சநாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்ச் செல்வி பிரபு, துணைத் தலைவர் சித்திக் அலி,

ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், வி.ஜி.பிரபாகரன், பி.வி. ஆர்.விசுவநாதன், ஜெய. இரவிதுரை, வேம்பி இரவி, ஜெ.ஜெயபால், வே. கணேசன், கு.செல்வமணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆவின் தலைவர் செ. தினகரன், மாவட்ட தொண்டர் அணி கபாலி, மாணவர் அணி ஸ்ரீ.வினோத், பொறியாளர் அணி புகழ். செல்வகுமார், வழக்கறிஞர் அணி சுவை. சுரேஷ்,

வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், சிறுபான்மை அணி டி. என். ஏ தமின், தகவல் தொழில்நுட்ப அணி ப. அன்பரசு, தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ், பாபு, ஆதிதிராவிடர் நலக் குழு அணி செல்வ. பிரேம், கலை, இலக்கிய அணி முத்து கணேசன், இலக்கிய அணி துரை மணிவேலன், நகர நிர்வாகிகள் என். என். இளங்கோ, வி. புருசோத்தமன், நந்தா நெடுஞ்செழியன், சோமு, சக்கரபாணி, ஜமாலுதீன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி தி.மு.க. சார்பில் ஆண்டிபட்டி பேருந்து நிலையம் முன்பு உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜோலார்பேட்டை நா. மணி

**பிப்ரவரி 6 (2013)**



**வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பஷீர் அகமது அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி. இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2024, பிப்ரவரி 9 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில்** அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர/பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினம் வாடிப்பட்டியில் நடைபெற்றதில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மு.பால்பாண்டியன், பால ராஜேந்திரன், புதூர் சேகர், ரோகிணி பொம்மதேவன், தன்ராஜ், சும்போன்மாறன், பொதும்பு தனசேகர், மேலூர் முகமது யாசின், மருது பாண்டியன், கௌரி சங்கர், சசிகுமார், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ரகுபதி, சத்யபிரகாஷ்,ஜெயராமன், பிரகாஷ், ஜெயகாந்தன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.